OS 201/2023

வா.சா.2 குமாரசாமி த/பெ நாராயணசாமி

நாள் 25.02.2026

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. என்னிடம் காட்டப்படும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கும் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கில் வாதி யார் தெரியுமா என்றால் குமரேசன், பிரதிவாதி யார் தெரியுமா என்றால் தினகரன். வாதி எனது நண்பர் அவர் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். வாதியும் நானும் ஒரே ஊர் தான். பிரதிவாதி கீழ்ப்பட்டு கிராமம் போளூர் தாலுக்கா ஆகும். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தறி நெசவு செய்கிறேன். வாதியும் நெசவு தொழில் தான் செய்கிறார். வாதி பட்டு தறி நிறுவனம் நடத்துகிறார் என்றால் நிறுவனம் வைத்திருக்கிறாரா என்று தெரியாது அவர் நெசவு செய்கிறார். நான் நெசவு செய்வதற்கு ஜரிகை, பட்டு ஆகியவற்றை வாதி குமரேசனிடம் தான் வங்குகிறேன் என்றால் சரிதான். நான் எத்தனை வருடங்களாக அவரிடம் பொருட்கள் வாங்குகிறேன் என்றால் 10 வருடங்களாக வாங்குகிறேன். எவ்வளவு கடன் தொகை கொடுக்கப்பட்டது என்றால் ரூ.1,25,000/- கொடுக்கப்பட்டது. மேற்படி தொகை வங்கி மூலம் அனுப்பப்பட்டதா நேரடியாக கொடுக்கப்பட்டதா என்றால் நேரடியாக கையில் பணமாக கொடுத்தார்.

2. தொகை எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்றால் வாதி குமரேசன் வீட்டில் வைத்து கொடுக்கப்பட்டது. என்ன வகையான ரூபாய் தாள்காளக கொடுக்கப்பட்டது என்றால் ரூ.500 ரூபாய் தாள்களாக கொடுக்கப்பட்டது. எத்தனை மணிக்கு பணம் கொடுக்கப்பட்டது என்றால் நேரம் நியாபகம் இல்லை. நான் எதற்காக குமரேசன் வீட்டிற்கு சென்றேன் என்றால் நானும் அவரும் பக்கத்து பக்கத்து வீட்டுக்காரர்கள் அடிக்கடி செல்வேன். குமரேசன் கேட்ட போது தான் சாட்சி கையொப்பம் போட்டேனா என்றால் ஆமாம். பணம் வாங்கிய நபர் அங்கு இருந்தாரா என்றால் இருந்தார். இன்றைய தினம் அவர் நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறாரா என்றால் இதுவரை நீதிமன்றத்தில் அவரை பார்க்கவில்லை. வாதி நடததி வரும் நிறுவனத்தில் வரவு செலவில் நான் சாட்சி கையொப்பம் செய்வேனா என்றால் செய்வேன். பணம் வாங்கிய நபரை அதற்கு முன்பு எனக்கு தெரியாது என்றால் ஆமாம் தெரியாது. பணம் கொடுத்ததற்கு நான் சாட்சி கையொப்பம் போட்டேன் பொறுப்பு கையொப்பம் போடவில்லை.

3. பாண்டில் நான் சாட்சி கையொப்பமும், கைரேகையும் வைத்திருக்கிறேன். தினகரன் அழைத்து வந்த மற்றொருவர் சாட்சி கையொப்பமும், கைரேகையும் வைத்தார். கையொப்பம் செய்த பிறகு கைரேகை ஏன் வைத்தேன் என்றால் கைரேகை வைக்க சொன்னார்கள் வைத்தேன் அர்த்தம் எனக்கு தெரியாது. எவ்வளவு வட்டி என்றால் 3 பைசாக்கு வட்டி எழுதப்பட்டது வழக்கு 2 பைசாக்கு போடப்பட்டது. எவ்வளவு வட்டி கணக்கீடு செய்து வழக்கு போடப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எத்தனை மாதங்கள் வட்டி கொடுக்கப்பட்டது என்ற விவரம தெரியுமா என்றால் தெரியாது. வட்டி கொடுக்கப்பட்ட விவரம் குறித்து வாதி என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. எனது முதன்மை வாக்குமூலத்தில் வட்டி வரவில்லை என்று சொல்லியிருக்கின்ற விவரம் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் எனக்கு நியாபகம் இல்லை.

4. வாதி கடனை கேட்டு பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார். எந்த தேதியில் அனுப்பினார் என்றால் தேதி நியாபகம் இல்லை. பிரதிவாதி வாதியிடம் பணம் எதுவும் வாங்கவில்லை என்றாலும் வாதி எனக்கு பக்கத்து வீட்டு காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த தேதியில் பணம் கொடுக்கப்பட்டது என்றால் 06.12.2020ல் கொடுக்கப்பட்டது. என்ன மாதிரியான பாண்டில் எழுதப்பட்டது என்றால் பச்சை பேப்பரில் எழுதப்பட்டது. 20 ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்டதா என்றால் நான் அந்த அளவிற்கு கவனிக்கவில்லை. நான் கையொப்பம் எந்த மையினால் போட்டேன் என்றால் நியாபகம் இல்லை. பாண்டை யார் எழுதியது என்றால் கோபிநாதன் என்பவர் எழுதினார். நான் செல்லும் போதே அங்கு அவர் இருந்தார். அவர் எந்த ஊர் என்றால் அவரும் எங்கள் ஊர் தான். பாண்டில் எவ்வளவு ரூபாய்கான முத்திரை ஒட்டப்பட்டிருந்தது என்றால் நியாபகம் இல்லை. பாண்டில் வாதி குமரேசன் கையொப்பம் போட்டிருக்கிறாரா என்றால் போட்டிருப்பார் நான் சாட்சி கையொப்பம் போட்டேன்.

5. பாண்டில் யார் யார் கைரேகை வைத்தது என்றால் சாட்சிகள் 2 பேரும், பணம் வாங்கிய தினகரனும் ரேகை வைத்தார். என்ன இங்க் கலரில் கைரேகை வைக்கப்பட்டது என்றால் நியாபகம் இல்லை. வாதிக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல. நானும் வாதியும் கோபிநாத் என்பவரும் ஒன்றாக சேர்ந்து பிரதிவாதி மீதும் தவறான தாவா தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. தாவா தேதியில் எந்த கொடுக்கல் வாங்கல் இல்லை என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.